மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

அசல் வழக்கு எண்.73/2013

நாள் 27.07.2023.

பெயர். கிருஷ்ணமூர்த்தி த/பெ.பெருமாள் கவுண்டர்

வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் 28.12.2010ம் தேதியன்று 19 செண்ட் கிரயம் வாங்கினேன். நான் மேற்படி 19 செண்ட் கிரயம் வாங்குவதற்கு முன்பாக மூல பத்திரம் மற்றும் வில்லங்க சான்றிதழ் பார்த்து வாங்கினேனா என்றால் மூல பத்திரம் மற்றும் வில்லங்க சான்றிதழ் பார்க்கவில்லை. வா.சா.ஆ 4 முதல் வா.சா.ஆ 7 வரையிலான ரசீதுகளில் எஃப் எல் ஆர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் சுந்தரேசனிடமிருந்து கிரயம் வாங்கும் போது சொத்தின் பட்டா எண்.1554 என இருந்தது. வா.சா.ஆ 4 முதல் வா.சா.ஆ 7 வரி ரசீதுகளின் பட்டா எண்.1554 எஃப் எல் ஆர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எஃப் எல் ஆர் என்பது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் தவறாக குடியிருப்பது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது கிரயம் கொடுத்தார்கள் நான் வாங்கினேன்.

3. வா.சா.ஆ 1 கிரய பத்திரத்தில் சுந்தரேசனுக்கு எவ்வாறு சொத்து உரிமையானது என குறிப்பிடவில்லை என்றால் அவ்வாறு தான் கண்டுள்ளது. வா.சா.ஆ 10 தீர்வை ரசீதில் பட்டா எண்.1554 என எழுதப்பட்டு அது அடித்துவிட்டு 1660 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 175/2011 கோவிந்தன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.175/2011 ல் தடையுத்தரவு கோரி மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி அசல் வழக்கில் கோவிந்தன் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் அவ்வசல் வழக்கு 02.03.2012ம் தேதியன்று தோன்றாதரப்பிரனாக தீர்ப்பு பிறபிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

R Krishnamurthy

**Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.**

P.T. [signature] 27.07.23

**District Munsif**
**Arni.**